# கொரிந்தியர்களைப் போன்று உங்கள் சபைக்கும் ஆவிக்குரிய வரங்கள் உண்டு

சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் S6b பாடத்தை வாசிக்கவும்.

**தேவனிடம் இருந்து பெற்ற விசேஷமான வரங்களைக் கொண்டு எல்லா விசுவாசிகளும் ஒருவருக்கு ஒருவர் சேவை செய்வார்களாக.**



## 1. தங்களது ஆவிக்குரிய வரங்களைக் கொண்டு சேவை செய்ய உங்கள் சபையாரை ஒன்றுதிரட்ட ஜெபத்தோடும் கர்த்தருடைய வார்த்தையோடும் உங்களை ஆயத்தப்படுத்துங்கள்

தற்போதையத் தேவைகளுக்கும் வட்டாரப் பழக்கவழக்கங்களுக்கும் பொருத்தமான நடவடிக்கைகளைத் தெரிந்து கொள்க.

**ஜெபம்:** "கர்த்தராகிய இயேசுவே, உமக்கும் பிறருக்கும் சேவை செய்ய நீர் அவர்களுக்குள் அளித்திருக்கும் வல்லமையை எங்கள் சபை மற்றும் குழுக்களின் உறுப்பினர்கள் அறிந்து கொள்ள உதவி செய்வீராக."

**ரோமர் 12:4-8ல் காண்க:**

- விசுவாசிகளின் ஆவிக்குரிய வரங்களால் யார் நன்மை அடைய வேண்டும்? (5)
- ஒவ்வொரு விசுவாசிக்கும் எந்த வரத்தை அருள வேண்டும் என்று தேவன் தீர்மானம் செய்கிறார்? (6)
- இரு வகையான பேச்சு வரங்கள் எவை? (6 & 7)
- மூன்று வகையான சேவிக்கும் வரங்கள் எவை? (7 & 8)

ஒருவருக்கொருவர் சேவை செய்ய ஒவ்வொரு விசுவாசிக்கும் பரிசுத்த ஆவியானவர் வல்லமையான திறமைகளை எவ்வாறு தருகிறார் என்பதை **1 கொரி.12ல்** காண்க.

- ஆவிக்குரிய வரங்கள் திறமைகள், செயல்கள் ஆகியவற்றை அளிப்பவர் யார்? (3-6)
- ஆவிக்குரிய வரங்களைப் பெறும் விசுவாசிகள் யார்? (7 & 11)
- எந்த நோக்கத்திற்காகப் பரிசுத்த ஆவியானவர் ஆவிக்குரிய வரங்களை அளிக்கிறார்? (7)
- விசுவாசி ஒருவர் எந்த வரத்தைப் பெற வேண்டும் என்று தெரிந்தெடுப்பவர் யார்? (11)
- தேவனுடைய பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கும் கிறிஸ்தவர்கள் யார்? (12 & 13)

- எல்லா கிறிஸ்தவர்களும் பெற்றிருக்க வேண்டிய ஆவிக்குரிய வரம் ஒன்று உண்டா? (27-30)

**1 கொரி.14:24-26ல் காண்க.**

- கூட்டங்களில் மற்றவர்களுக்கு விசுவாசிகள் ஒவ்வொருவரும் சேவை செய்யக் கூடிய எளிய வழிகள்.
- ஆவிக்குரிய வரங்களை உபயோகிப்பதில் ஒவ்வொரு விசுவாசியின் நோக்கமும் எதுவாக இருக்க வேண்டும்?

**எபே.4:10-16ல் காண்க.**

- சபைகளுக்கு வரம் பெற்ற மக்களைக் கொடுப்பது யார் (10-11)
- சபைகளுக்கு கொடுக்கப்பட்டுள்ள ஐந்து வகையான வரம்பெற்ற நபர்கள்(11)
- வரம் பெற்ற நபர்கள் தங்கள் ஆவிக்குரிய வரங்களைக் கொண்டு என்ன செய்ய வேண்டும்? (12)
- ஆவிக்குரிய வரங்களை சபையார் பிரயோகிக்கும் போது எற்படும் விளைவுகள்? (13-16)

**1 பேதுரு 4:7-11ல் காண்க.**

- ஆவிக்குரிய வரங்களை உபயோகிக்கும் போது விசுவாசிகள் ஒருவருக்கு ஒருவர் கொள்ள வேண்டிய மனநிலை என்ன? (7-9)
- தங்களுக்குள்ள ஆவிக்குரிய வரங்களைக் கொண்டு விசுவாசிகள் என்ன செய்ய வேண்டும்? (10)
- முக்கிய ஆவிக்குரிய வரங்களில் இரண்டு வகைகள் (11)
- வரம் பெற்ற பிரசங்கிகள் எதைப்பற்றி பேசவேண்டும்? (11)
- வரம்பெற்ற ஊழியர்கள் தங்கள் வரங்களை உபயோகிக்கும் பலத்தை எங்கிருந்து பெறுகின்றனர்? (11)
- நமது ஆவிக்குரிய வரங்களைக் கொண்டு நாம் யாரை மகிமைப் படுத்த வேண்டும் (11)

பர்னபா எவ்வாறு தனது வரங்களான கொடுத்தலை அப்.4:32-37லும், ஊக்கமளித்தலை அப்.9:22-27லும், விசுவாசத்தை அப்.11:22-66லும், போதித்தலை 13:1லும், அப்போஸ்தல ஊழியத்தை அப்.13:2-4லும் உபயோகிக்கிறான் என்பதைக் காண்க.

## 2. வரும் வாரத்துக்கான நடவடிக்கைகளைப் பற்றி உங்கள் உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்.

ஒன்றாக அமர்ந்து பவுல் - தீமோத்தேயு சிறுதொகுப்பு (booklet) S6e ஐ மீள்பார்வை செய்து ஆவிக்குரிய வரங்களைப் பற்றிய விரவங்களைக் **காண்க.** அதையும், இப்போது படிப்பதையும் சிறுகுழுவின் மேய்ப்பர்களோடு சேர்ந்து மீள்பார்வை செய்யவும்.

நீங்கள் அறிந்திருந்தால், உங்கள் மந்தையின் ஒவ்வொரு உறுப்பினரின் ஆவிக்குரிய வரங்களைப் பற்றியும் விவாதிக்கலாம்.

ஒவ்வொரு சிறுகுழுவின் மேய்ப்பர்களும் குழுவின் உறுப்பினர்கள் பேசுவதைக் கேட்டு, கவனித்து ஒவ்வொருவருக்கும் இருக்கும் ஆவிக்குரிய வரங்களைப் பற்றி அறிந்து கொள்ள **ஏற்பாடுகள் செய்யவும்.**

ஒரு குழுவிற்கு ஒரு வரம் தேவைப்பட்டு, இன்னொரு குழுவில் அதே வரம் இருந்தால் அந்த வரம் பெற்ற உறுப்பினரைக் கொஞ்சநாட்கள் இல்லாத குழுவிற்கு அனுப்ப **ஏற்பாடு செய்யலாம்.**

## 3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்.

பர்னபா தன் ஆவிக்குரிய வரங்களை எவ்வாறு உபயோகித்தான் என்பதைத் கூறவும் அல்லது **நடித்துக் காட்டவும்.** மேலும் அவனுடைய பெயரை ஏன் மாற்றினர்கள் என்பது பற்றி விவாதிக்கலாம். (அப்.4:36) .

ஒரு விசுவாசி பெறும் ஆவிக்குரிய வரத்தை தேவனே தீர்மானிக்கிறார் என்பதையும், எந்த நோக்கத்தோடு அவற்றை நாம் உபயோகிக்க வேண்டும் என்பதையும், மற்ற வழிகாட்டல் களையும் (பகுதி 1 பார்க்கவும்) **விளக்கிக் கூறவும்.** பகுதி 1 லிருந்து ஆவிக்குரிய வரங்களைப் பற்றிய கேள்விகளைக் கேட்கலாம்.

தங்கள் ஆவிக்குரிய வரங்களை அன்புடனே ஞானத்தோடு உபயோகித்தவர்களிடம் இருந்து எவ்வாறு உதவி பெற்றுக்கொண்டனர் என்று விசுவாசிகள் சாட்சி **கூறட்டும்.**

சேர்ந்து **1 கொரி. 14:24–31** ஐ வாசித்து அதில் கூறப்படும் பல ஆவிக்குரிய வரங்களை விசுவாசிகள் பட்டியல் இடட்டும். சபையிலும் குழுவிலும் இவைகள் பிரயோகிக்கப் பட்டதை எவ்விதம் கண்டனர் என்பதை விளக்கட்டும்.

**சிறுவர்கள்** தாங்கள் தயாரித்த நாடகத்தையும் கேள்விகளையும் வழங்கலாம்.

**1 கொரி 11:23–34** ஐ வாசித்து கர்த்தரின் பந்தியை ஆசரிக்கவும். கொரிந்தியர்கள் எவ்வாறு கர்த்தரின் பந்தியைத் தவறுதலாக உபயோகித்தனர் என்பதையும், அவர்களில் சிலர் வியாதிப்படவும் மரணமடையவும் கர்த்தர் ஏன் அனுமதித்தார் என்பதையும் விளக்கவும்.

தங்கள் ஆவிக்குரிய வரங்களைப் பற்றி பேச விசுவாசிகள் இரண்டு அல்லது மூன்று பேர் அடங்கிய **சிறு குழுக்களாக** அமரலாம். ஒருவர் கூறுவதை ஒருவர் கேட்டு, ஒருவரை ஒருவர் ஊக்குவித்து, ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்கவும்.

சேர்ந்து **மனப்பாடம்** செய்ய வேண்டிய வசனம். ரோமர் 12:10 & 11.

### ஆவிக்குரிய வரங்களை உபயோகிக்க வழிகாட்டுதல்கள்

1 சிறு குழுக்களில் மக்கள் சேவை செய்யும் போது, அவர்களது ஆவிக்குரிய வரங்கள் அப்பட்டமாகப் புலனாவதால் மற்றவர்கள் அதை அங்கீகரிப்பார்கள். புதிய விசுவாசிகளை சேவை செய்வதில் இருந்து தடுக்க வேண்டாம்.

2 ஆவிக்குரிய வரங்களை உபயோகிப்பதற்கு எல்லா விசுவாசிகளுக்கும் வாய்ப்பளியுங்கள். இதைச் சிறிய குழுக்களிலேயே சிறப்பாகச் செய்ய முடியும். திறமையுள்ள மனிதர்கள் பேசுவதைச் சும்மா கேட்டுக் கொண்டிருப்பது மட்டுமே சபைக் கூட்டங்கள் என்று வரையறை போட வேண்டாம்.

3 ஆவிக்குரிய வரங்களை உபயோகிக்கும் போது நமக்கு மக்கள் மேல் அன்பு இருக்க வேண்டும் என்பதைத் தொடர்ந்து விசுவாசிகளுக்கு ஞாபகப்படுத்துங்கள். மக்களிடம் கோபமும் வெறுப்பும் இருந்தால் அவர்களது வரங்கள் மற்றவர்களுக்கு கேடு செய்து விடக் கூடாது.

4 தங்களது ஆவிக்குரிய வரங்களுக்கு ஏற்றபடி மக்கள் சபையிலும் குழுக்களிலும் பொறுப்புகளையும், அலுவல்களையும் (offices), ஊழியங்களையும் வகிக்கட்டும். அதற்கென வரம் இல்லாத வேலைகளை மக்களிடம் திணிக்க வேண்டாம்.

5 மூப்பர்களுக்கு பேசும் வரமும், கண்காணிகளுக்கு (deacons) சேவிக்கும் வரமும் வேண்டும்.

6 சிறு குழுக்களும் ஊழிய குழுக்களும் வெவ்வேறு வரம் பெற்ற உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவர் இவற்றை ஒற்றுமைப் படுத்துவார். ஒரே வரங்களை உடையவர்களை ஒரே குழுவில் போடுவதைத் தவிர்க்கவும்.

7 ஆவிக்குரிய வரம் இருப்பதாலேயே ஒருவருக்கு மற்ற விசுவாசிகள் மேல் அதிகாரம் தரப்படவில்லை. மாறாக, மற்றவர்களின் நன்மையைத்தேடும் வகையில் ஆவிக்குரிய வரங்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு சேவை செய்யவே பயன்படுத்தப்பட்ட வேண்டும்.

8 ஒவ்வொரு விசுவாசிக்கும் இருக்கும் ஆவிக்குரிய வரங்கள் பிறருக்கு நன்மை பயப்பதாகவே இருப்பதால், இனம், கல்விநிலை, ஜாதி, சமுதாய அந்தஸ்து ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டு ஒவ்வொரு விசுவாசியும் பிறருக்கு முக்கியமே.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net